<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், விரைவு நீதிமன்றம்,</u>
<u>கும்பகோணம்.</u>

முன்னிலை – திருமதி T. ஜெயஸ்ரீ., எம்.எல்,
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.
2026ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 24ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம் ஆனி 10–ம் நாள்
<u>அமர்வு வழக்கு எண்.**318/2025**</u>
**(TNTJ010086682025)**
**(திருநீலக்குடி காவல் நிலைய குற்ற எண். 692/2023)**

( திருவிடைமருதூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்னுரை பதிவேட்டு வழக்கு எண். 30/2025-இல் பிறப்பிக்கப்பட்ட கமிட்டல் உத்தரவின் படி தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு 11.09.2025 அன்று அமர்வு வழக்கு எண். 318/2025–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்பு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி அவர்களின் உத்தரவின் படி, இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப் பட்டுள்ளது.)

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையிடுபவர் | : | காவல் ஆய்வாளர்,<br>திருநீலக்குடி, காவல் நிலையம்,<br>குற்ற எண். 692/2023<br>ச/பி. 294(b), 506 (2) இ.த.ச. வின் கீழும் மற்றும் 25(1A) Arms Act., |
| 2. | எதிரியின் பெயர் | : | ஆரோக்கியராஜ், (வயது 26/2026),<br>த/பெ. வென்னிஸ், கீழத்தெரு, வடகரை,<br>திருவிடைமருதூர் தாலுக்கா. |
| 3. | குற்றச்சாட்டுக்கள் | : | எதிரி மீது பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 and 25(1A) Arms Act., இன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப் பட்டுள்ளது. |
| 4. | எதிரியின் பதில் | : | எதிரி தான் குற்றவாளி அல்ல என கூறினார். |
| 5. | நீதிபதியின் முடிவு | : | குற்றவாளி அல்ல |

நாள் **: 24.06.2026**

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:31:32 +0530

| | | | |
|---|---|---|---|
| 6. | தீர்ப்பு | : | முடிவில், எதிரி மீதான பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 and 25(1A) Arms Act., இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்சொன்ன சட்டப்பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 and 25(1A) Arms Act.,இன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்வு கண்டு எதிரியை 258(i) BNSS Act 2023 பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.<br><br>இந்த வழக்கில் SCP.No.66/2025இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 36 செமீ மொத்த நீளமுள்ள கத்தி ஒன்றை, மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவின்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது. |

| 1. | எதிரி கைது செய்யப்பட்ட விவரம் | கைது நாள் | பிணை நாள் | மொத்த நாட்கள் |
|---|---|---|---|---|
| | ராகுல் (எ) ராஜசேகர் | 03.11.2023 | 21.11.2023 | 18 |
| 2 | புகார் கொடுத்த நாள் | 03.11.2023 | – | – |
| 3 | இறுதி குற்ற பத்திரிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த நாள் | 02.07.2025 | – | – |
| 4 | குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 20.11.2025 | - | - |
| 5 | குற்றபல்வகை மனுக்கள்<br>- | தாக்கல் செய்த நாள் | உத்தரவு நாள் | – |



JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:31:41 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | – | | | |
| 6 | சாட்சிகளின் பெயர்கள் | முதல் விசாரணை நாள் | எதிரி தரப்பு குறுக்கு விசாரணை நாள் | அரசு தரப்பு குறுக்கு விசாரணை நாள் | மீண்டும் அழைக் கப்பட்ட நாள் |
| | அ.சா.1 திரு. பழனிவேல் ( சிறப்பு உதவி ஆய்வாளர்) | 24.02.2026 | 24.02.2026 | - | - |
| | அ.சா.2 திரு. எழில்மாறன் (தலைமை காவலர்) | 24.02.2026 | 24.02.2026 | - | – |
| | அ.சா.3 திரு. ஜெயசந்திரன் (2–ம் நிலை காவலர்) | 24.02.2026 | 24.02.2026 | - | – |
| | அ.சா.4 திரு. ராஜேஷ் (காவல் ஆய்வாளர்) | 15.06.2026 | 15.06.2026 | - | – |
| 7 | சட்டப் பிரிவு 351(1)(b) கு.வி.மு.ச வின் கீழான கேள்வி | 16.06.2026 | - | | – |
| 8 | எதிரிக்கு எதிராக பிணைவிடா பிடி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள் மற்றும் ரத்து செய்த விவரங்கள் | பெயர் – | வழங்கிய நாள் – | | இரத்து செய்த நாள் – |
| | – | – | – | | –– |
| 9 | Grant of stay by Superior Courts and the results thereof. | – | – | | – |

இந்த வழக்கானது 22.06.2025 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்ததில் அரசு தரப்பில் திரு. B.விஜயகுமார், அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. என். செல்வகுமார், அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

## தீர்ப்புரை

### 1) அரசுத் தரப்பு வழக்கு:

கடந்த 03.11.2023ம் தேதி காலை 11.30 மணிக்கு திருநீலக்குடி காவல் நிலைய சரகமான திருநாகேஸ்வரம் கடைத்தெருவில் எதிரி ஆரோக்கியராஜ் தனது கையில் கத்தியை வைத்துக்கொண்டு திருநாகேஸ்வரம் கடைவீதியில் நின்றுக்கொண்டு " நான் தான் பெரிய ரவுடிடா எந்த குச்சிகாரி , தேவடியா மகனுக்காவது தில்லு இருந்தா என் கிட்ட வந்து பாருங்கடா" என்று கையில் வைத்திருந்த கத்தியை சுழட்டியும், பொது மக்களுக்கும் , போக்குவரத்திற்கும் இடையுறு செய்து பொதுமக்களுக்கு அச்சம் மற்றும் பீதியை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் 25(1A) Arms Act, இன் கீழ் திருநீலக்குடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இந்த வழக்கானது 11.09.2025 அன்று நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையானவுடன்

எரிக்கு இவ்வழக்காவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது அரசு தரப்பில் ஆஜரான அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் இவ்வழக்கின் எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆகியோர்களின் வாதுரைகளைக் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இவ்வழக்கின் எதிரி மீது குற்றச்சாட்டு வனையப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றத்திற்குத் தோன்றியமையால் எதிரி மீது  சட்டப் பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 and 25(1A) Arms Act., இன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிக்கு எடுத்துக் கூறி வினவிய போது,  எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்தார்.

3) இவ்வழக்கின் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பு சாட்சிகள் பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ள 4 சாட்சிகளையும் அ.சா.1 முதல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்களும், சான்று பொருளாக சா.பொ.1ம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் வாயிலாக அறியவரும் அரசு தரப்பு வழக்கானது.

**அ.சா.1 திரு.  பழனிவேல் ( சிறப்பு உதவி ஆய்வாளர்)** தனது சாட்சியத்தில் தான் திருநீலக்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இதே காவல் நிலையத்தில்,

03.11.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு தான் நிலைய பொறுப்பில் இருந்த போது, போன் மூலம் கிடைத்த தகவலை பெற்று, தானும் முதல் நிலை காவலர் 196 எழில்மாறன் மற்றும் இரண்டாம் நிலை காவலர் 1785 ஜெயசந்திரன் ஆகியோர் புறப்பட்டு, திருநாகேஸ்வரம் கடை வீதி சென்று, பார்வையிட்ட போது அங்கு அரிவாளை காட்டி ஒரு நபர் பொது மக்களை மிரட்டிக்கொண்டிருந்ததாகவும், போக்குவரத்திற்கு இடையூராக இருந்தவரை பிடிக்க முயன்ற போது, கிட்ட வந்தால் உங்களையும் குத்துவேன், வெட்டுவேன் என்று மிரட்டியதாகவும், பின்னர் உடன் வந்த காவலர் மற்றும் பொது மக்கள் உதவியுடன் அவரை பிடித்து நிலையம் கொண்டு வந்து, தனியறிக்கையுடன் எதிரியை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் என்றும், அந்த தனி அறிக்கை அ.சா.ஆ. 1, தன்னிடம் காண்பிக்கப்படும் கத்தி சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்தியது அல்ல என்றும், அவரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் ஆரோக்கியராஜ் த/பெ. வென்னீஸ் கீழத்தெரு வடக்கரை, திருவிடைமருதூர் என்று தெரியவந்தது என்றும், ஆய்வாளரிடம் நடந்த விவரம் கூறினேன், ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 திரு. எழில்மாறன் (தலைமை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் இதற்கு முன்பு திருநீலக்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, 03.11.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. என். பழனிவேல் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது, போன் மூலம் கிடைத்த தகவலை பெற்று,

தானும் இரண்டாம் நிலை காவலர் 1785 ஜெயசந்திரன் ஆகியோர் உதவி ஆய்வாளருடன் புறப்பட்டு, திருநாகேஸ்வரம் கடை வீதி போய் பார்த்த போது ஆரோக்கியராஜ் த/பெ. வென்னீஸ் என்பவர் தன் கையில் கத்தியை வைத்துக்கொண்டு, இந்த ஏரியாவிலேயே நான் தான் பெரிய ரவுடி என்று, தகாத வார்த்தைகளால் பேசி கிட்ட யாராவது வந்தீங்கனா வெட்டி கொன்றுவிடுவேன் என்று மிரட்டிக்கொண்டிருந்ததாகவும், போக்குவரத்திற்கு இடைஞ்சலாக எதிரி சத்தம் போட்டுக்கொண்டிருந்தார் என்றும், பொது மக்கள் உதவியுடன் தாங்கள் எதிரியை பிடித்து நிலையம் கொண்டு வந்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தோம் என்றும், திருநீலக்குடி காவல் நிலையத்தில் வைத்து, தன் முன்னிலையிலும் ஜெயசந்திரன் முன்னிலையிலும் ஆய்வாளர் எதிரியை விசாரித்த போது, எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 2, ஆய்வாளர் மகஜரில் தங்கள் முன்னிலையில் அந்த கத்தியை கைப்பற்றினார் என்றும், அந்த கத்தியை பார்த்தால் தன்னால் அடையாளம் சொல்ல முடியும் என்றும், 36 செமீ நீளமுள்ள கத்தி ஒன்று அதில் வெட்டும் இரும்பு பாகம் 22 செமீ, அதில் இரும்பு பூணுடன் கூடிய மரக்கைப்பிடி 14 செமீ, மரக்கைப்பிடியில் வளைந்த இரும்பு பாகம் 20 செமீ என்றும், அந்த கத்தி சா.பொ.1 என்றும் அந்த கத்தியை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 என்றும், இது குறித்து ஆய்வாளர்

தன்னை விசாரித்தார்  என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) **அ.சா. 3 திரு. ஜெயசந்திரன் (இரண்டாம் நிலை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் திருநீலக்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது, 03.11.2023 ஆம் தேதி காலை 10.45 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. என். பழனிவேல் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்த போது, போன் மூலம் கிடைத்த தகவலை பெற்று, தானும் தலைமை காவலர் எழில்மாறன் ஆகியோர் உதவி ஆய்வாளருடன் புறப்பட்டு, திருநாகேஸ்வரம் கடை வீதி போய் பார்த்த போது, ஆரோக்கியராஜ் த/பெ வென்னீஸ் என்பவர் தன் கையில் கத்தியை வைத்துக்கொண்டு, தன் கிட்டக்க வந்தா குத்திவிடுவேன், என்றும், நான் பெரிய ரவுடி என்று மிரட்டிக்கொண்டிருந்தார் என்றும், பொது மக்கள் உதவியுடன் எதிரியை சுற்றி வளைத்து பிடித்து, நிலையம் கொண்டு வந்ததகாவும், ஆய்வாளர் எதிரியை தன் முன்னிலையிலும் எழில்மாறன் முன்னிலையிலும் விசாரித்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார் என்றும், அதனடிப்படையில் எதிரியிடமிருந்து கத்தியை ஆய்வாளர் கைப்பற்றினார் என்றும், அதற்கான கைப்பற்றுதல் மகஜரிலும் தானும் எழில்மாறனும் சாட்சியாக கையெழுத்து செய்தோம் என்றும், இது குறித்து ஆய்வாளர் தன்னை விசாரித்தார்என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) **அ.சா.4 திரு. ராஜேஷ் (காவல் ஆய்வாளர்)** தனது சாட்சியத்தில் தான் கடந்த 03.11.2023,  13.00 மணிக்கு திருவிடைமருதூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது திருநீலக்குடி சிறப்பு உதவி ஆய்வாளர் பழனிவேல் 2455 என்பவரிடம் தனி அறிக்கை பெற்றதாகவும்,


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS Date: 2026.06.24 17:32:15 +0530

03.11.2023ம் தேதி காலை 11.00 மணிக்கு திருநாகேஸ்வரம் கடை வீதியில் ஆரோக்கியராஜ் என்பவர் கையில் கத்தியை வைத்துக்கொண்டு போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் இடையூறாக " நான் பெரிய ரவுடி" என்று சொல்லிக்கொண்டும், பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு செய்தவரை சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் முதல் நிலை காவலர் எழில்மாறன், இரண்டாம் நிலை காவலர் ஜெயச்சந்திரன் ஆகியோருடன் சேர்ந்து மேற்படி எதிரியை பொதுமக்கள் உதவியுடன் பிடித்து அவருடன் நிலையம் ஆஜராகி தனி அறிக்கை பெற்று திருநீலக்குடி காவல் நிலைய குற்ற எண். 692/2023 பிரிவுகள் 294(b),506(2) இதச 25(1)(A) Arms Actன் படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், அ.சா.ஆ.4 ஐ உயர் அதிகாரிகளுக்கும், 2வது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், 13.30 மணிக்கு நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்து எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 13.45 மணி முதல் 14.30 மணி வரை பதிவு செய்தேன் என்றும், பின்னர் 14.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் தடயப்பொருளான பட்டா கத்தியை கைப்பற்றினேன் என்றும், பின்னர் 15.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன் என்றும், அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.5 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 என்றும், மேற்படி சம்பவம் பற்றி விசாரிக்க சம்பவம் உண்மை என்று தெரிய வந்ததால் பொது மக்கள் யாரும் சாட்சி அளிக்க முன்வராததாலும் போலீஸ் சாட்சிகளிடம் தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது மேற்படி அதே சட்டப்பிரிவுகளின்


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:32:21 +0530

கீழ் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், தான் கைப்பற்றிய ஆயுதம் சா.பொ.1 என்றும், ஆஜர் எதிரிதான் இந்த வழக்கின் எதிரி என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டது.

6) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகளைப் பற்றி எதிரிக்கு எடுத்துக் கூறி 351 (1) (b) BNSS 2023 Act-ன் கீழ் விசாரிக்கப்பட்ட போது, எதிரி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் என மறுத்து, தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

7) இந்த வழக்கில் தீர்வுக்காணப்படவேண்டிய பொருண்மை யாதெனில், எதிரி மீது வனையப்பட்ட சட்டப் பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 மற்றும் 25(1A) Arms Act., இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

8) இந்த வழக்கானது கடந்த 03.11.2023ம் தேதி காலை 11.30 மணிக்கு திருநீலக்குடி காவல் நிலைய சரகமான திருநாகேஸ்வரம் கடைத்தெருவில் எதிரி ஆரோக்கியராஜ் தனது கையில் கத்தியுடன் திருநாகேஸ்வரம் கடைவீதியில் நின்றுக்கொண்டு " நான் தான் பெரிய ரவுடிடா எந்த குச்சிகாரி, தேவடியா மகனுக்காவது தில்லு இருந்தா என்

கிட்ட வந்து பாருங்கடா" என்று, கையில் வைத்திருந்த கத்தியை சுழட்டியும், பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையுறு செய்து பொதுமக்களுக்கு அச்சம் மற்றும் பீதியை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாகஎதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(b), 506(2) மற்றும் 25(1A) Arms Act, இன் கீழ் திருநீலக்குடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு குற்றச்சாட்டும் வனையப்பட்டுள்ளது.

9) எதிரி மீது முதல் குற்றச்சாட்டாக கடந்த 03.11.2023ம் தேதி காலை 11.30 மணிக்கு திருநாகேஸ்வரம் கடைத்தெருவில் எதிரி " நான் பெரிய ரவுடிடா எந்த குச்சிகாரி, தேவடியா மகனுக்காவது தில்லு இருந்தா என் கிட்ட வந்து பாருங்கடா என்று காமகுரோதமான வார்த்தைகளால் பொதுமக்களை பொதுவெளியில் திட்டியதாக எதிரி மீது 296(b) BNS Act ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில், இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த அ.சா.1 திரு. பழனிவேல் தனது சாட்சியத்தில் எதிரி கையில் அரிவாளை காட்டி பொது மக்களை மிரட்டிக்கொண்டு, போக்குவரத்திற்கு இடையூராக இருந்தார் என்று மட்டுமே சொல்லியுள்ளார். என்ன வார்த்தைகளை சொல்லி பொதுமக்களை எதிரி பேசினார் என்று அ.சா. 1 குறிப்பிட்டு சொல்லவில்லை. அதேபோல் அ.சா.2 எழில்மாறனும், அ.சா.3 ஜெயசந்திரன் ஆகியோர் எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு, இந்த ஏரியாவிலேயே நான் தான் பெரிய ரவுடிடா என்றும், தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்ததாக மட்டுமே



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:32:34 +0530

சொல்லியுள்ளார்கள், எதிரி என்ன வார்த்தைகளை பேசினார் என்று குறிப்பிட்டு அ.சா.1 முதல் அ.சா.3 வரையானவர்கள் யாரும் தங்களது சாட்சியத்தில் சொல்லவில்லை. இந்த வழக்கில் எதிரியின் குற்றசெய்கையை நிரூபிக்கும் வகையில் தனி நபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சம்பவயிடத்தில் இருந்ததாக சொல்லப்படும் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.4 ஆய்வாளர் திரு.ராஜேஷ் எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூராக நான் பெரிய ரவுடி என்று சொல்லிக்கொண்டு பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு செய்தார் " என்று மட்டுமே சொல்லியுள்ளார். குறிப்பிட்டு எதிரி என்ன வார்த்தைகளை பேசினார் அதனால் எந்த வகையில் பொதுமக்கள் அவமானப்பட்டார்கள், அசிங்கப்பட்டார்கள் என்று சொல்லவில்லை. எனவே மேற்சொன்ன சாட்சி, சான்றாவணங்களின் வாயிலாக எதிரி மீதான 296(b) BNS Act, ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் காண்கிறது.

10) இரண்டாவது குற்றச்சாட்டாக எதிரி திருநாகேஸ்வரம் கடைத்தெருவில் நின்றுக்கொண்டு சம்பவத்தின் போது தகாத வார்த்தைகளால் பேசி திட்டிவிட்டு தன் கையில் வைத்திருந்த கத்தியை சுழற்றிக்கொண்டே, பொதுமக்களுக்கு அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தி போக்குவரத்திற்கு இடையூராக இருந்தார் என்றும், அவரை போலிசார், பொதுமக்கள் உதவியுடன் சுற்றி



JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:32:40 +0530

வளைத்து பிடிக்க முயன்ற போது தன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி என் கிட்டவந்தால் உங்களை குத்திகொலை செய்துவிடுவேன் என்று அபாயகரமான ஆயுதமான கத்தியை காட்டி கொலைமிரட்டல் விடுத்தாக எதிரிமீது 351(3) BNS Act, ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பழனிவேல் கடந்த 03.11.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது போன் மூலம் கிடைத்த தகவலை பெற்று, தானும் அ.ச.2 முதல் நிலை காவலர் எழில்மாறன் மற்றும் அ.சா.3 இரண்டாம் நிலை காவலர் ஜெயசந்திரன் ஆகியோர் புறப்பட்டு சம்பவயிடத்திற்கு சென்றதாக சொல்லப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 எதிரி சம்பவத்தின் போது அரிவாளை காட்டி பொதுமக்களை மிரட்டிக்கொண்டிருந்ததாகவும், அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு பொதுமக்களை மிரட்டிக்கொண்டிருந்தார் என்று தங்களது சாட்சியத்தில் ஒருவருக்கொருவர் வேறுபட்டு சான்றுபொருளான சா.பொ. 1 குறித்து முரணாக சாட்சியம் அளித்துள்ளனர். எதிரி கத்தியை காட்டி மிரட்டியதாக அ.சா.1 சொல்லாத நிலையில் வேறு தனிநபர் சாட்சிகள் யாரும் இவ்வாறு எதிரி பொதுஇடத்தில் கத்தியை காட்டி கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.4 காவல் ஆய்வாளர் திரு. ராஜேஷ் தனது சாட்சியத்தில் எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும், இடையூறாக நான் பெரிய ரவுடி என்று

சொல்லிக்கொண்டு பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறு செய்தவரை அ.சா.1 முதல் முதல் அ.சா.3 பொதுமக்கள் உதவியுடன் எதிரியை பிடித்து தனி அறிக்கை பெற்று காவல் நிலையத்தில் வைத்து எதிரியை கைது செய்ததாக கூறியுள்ளார். இவ்வாறான நிலையில் எதிரி மீது கூறப்படும் குற்றச்சாட்டை தான் நேரடியாக பார்த்ததாகவோ, எதிரி காமகுரோதமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டு யாரை மிரட்டிக்கொண்டிருந்தார் என்று சொல்லவில்லை. இவ்வழக்கில் தனிநபர் யாரும் எதிரியின் குற்றச்செய்கை குறித்து சாட்சியம் அளிக்காத நிலையில், போலிஸ் சாட்சிகள் அளித்த சாட்சியத்தில் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதால் சந்தேகம் எழுகிறது. அந்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி மீதான 351(3) BNS Act -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் காண்கிறது.

**11)** மூன்றாவதாக எதிரி பொதுமக்கள் அதிகமாக கூடும் திருநாகேஸ்வரம் கடைவீதியில் அபாயகரமான ஆயுதமான கத்தியை மறைத்து எடுத்துவந்து பயன்படுத்தியதாக எதிரி மீது 25(1A) Arms Act ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கில் சம்பவயிடமான பொதுமக்கள் அதிகமாக இருந்த இடத்தில் இவ்வாறு எதிரி அபாயகரமான ஆயுதத்தை பயன்படுத்தினார் என்பதை நிரூபிக்கும் வகையில் அந்த இடத்திலிருந்த தனிநபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:32:52 +0530

அ.சா.1 எதிரி பயன்படுத்திய சான்றுபொருள் குறித்து முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 மற்றம் அ.சா.3 வரையான சாட்சிகள் எதிரியை நிலையம் கொண்டு வந்தபிறகு நிலையத்தில் வைத்து தான் கத்தியை கைப்பற்றுதல் மகசரில் ஆய்வாளர் கைப்பற்றியதாக சொல்லியுள்ளனர். இந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.4 காவல் ஆய்வாளர் திரு. ராஜேஷ் அ.சா.2 மற்றும் அ.சா.3ன் சாட்சியத்திற்கு இணங்க ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். உண்மையாக பொதுஇடத்தில் இந்த கத்தி எதிரியால் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது குறித்து தனிநபர் சாட்சிகளை விசாரித்து உண்மை நிலையை நீதிமன்றத்திற்கு உணர்த்தாமலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் இந்த வழக்கின் முக்கிய தடயபொருளான கத்தியை காவல் நிலையத்தில் வைத்து கைப்பற்றினோம் என்று கூறுவது மிகுந்த சந்தேகத்தை எழுப்புவதால் இந்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரி மீதான மேற்சொன்ன 25(1A) Arms Act ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் காண்கிறது.

12) எனவே, எதிரி பொது இடத்தில் பல பேர் பார்க்கும் வகையில் தனது கையில் கத்தியை வைத்துக்கொண்டு திருநாகேஸ்வரம் கடைவீதியில் நின்றுக்கொண்டு " நான் தான் பெரிய ரவுடிடா எந்த குச்சிகாரி, தேவடியா மகனுக்காவது தில்லு இருந்தா என் கிட்ட வந்து பாருங்கடா" என்று கையில் வைத்திருந்த கத்தியை சுழட்டியும், பொது


JAYASHREE THOMAS
Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:32:58 +0530

மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையுறு செய்து பொதுமக்களுக்கு அச்சம் மற்றும் பீதியை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டு சொல்லப்பட்டுள்ள நிலையில், இது குறித்து பரிசீலனை செய்கையில் அ.சா.1 பழனிவேல் தனது சாட்சியத்தில் தான் காவல் நிலையத்தில் இருந்த போது போன் மூலம் தகவல் கிடைத்ததாக மட்டுமே சொல்லியுள்ளார், போன் கால் எங்கிருந்து வந்தது, யார் போன் செய்தது, அதன் தொலைபேசி எண் என்ன என்பது குறித்து எந்தவித தெளிவான சாட்சியமும் அளிக்கவில்லை. இந்நிலையில் அ.சா.1யை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது சம்பவயிடமானது திருநாகேஸ்வரம் கடை தெரு என்பதும், 3 வீதிகள் சந்திக்கூடிய முச்சந்தி என்றால் ஆமாம் என்றும், அந்த மையப்பகுதியில் CCTV பொறுத்தப்பட்டுள்ளதா என்றால் ஆமாம் என்றும், அதை வாங்கி பார்த்தால் நடநத் உண்மை விவரம் தெரியும் என்றால் ஆமாம் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், அந்த அந்த CCTV (Footage) பதிவுகளை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாதது சந்தேகத்திற்கூறிய ஒன்றாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.சா.4 காவல் ஆய்வாளர் ராஜேஷ் தனது சாட்சியத்தில சம்பவயிடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் கைப்பற்றதல் மகசர் தயார் செய்தேன் என்று கூறியுள்ள நிலையில், சம்பவயிடம் பொதுமக்கள் அதிகமாக வந்துசெல்லும் இடமாகவும், கடைகளும், வீடுகளும் அதிகம் உள்ள பகுதியாக மாதிரி வரைப்படத்தில் காட்டப்பட்டுள்ள நிலையில் அந்த மாதிரி வரைப்படம், மற்றும்

கைப்பற்றுதல் மகசரில் தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரித்து சாட்சியாக கையொப்பம் பெறாதது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்தவதாகவே உள்ளது.

**13)** எனவே இவ்வழக்கு சம்மந்தமாக போதுமான சாட்சி, சான்றாவணங்கள் அரசு தரப்பில் முன்னிடப்படவில்லை. எனவே, இந்நீதிமன்றத்தில் முன்னிடப்பட்ட சாட்சி சான்றாவணங்களின் வாயிலாக எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 and 25(1A) Arms Act.,ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவில், எதிரி மீதான பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 and 25(1A) Arms Act., இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்சொன்ன சட்டப்பிரிவுகள் 296(b), 351(3) BNS Act, 2023 and 25(1A) Arms Act.,இன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்வு கண்டு எதிரியை 258(i) BNSS Act 2023 பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கப்படுகிறது.

இந்த வழக்கில் SCP.No.66/2025இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 36 செமீ மொத்த நீளமுள்ள கத்தி ஒன்றை, மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும், மேல் முறையீடு இருப்பின் மேல் முறையீட்டு உத்தரவின்படி செயல்படவும் உத்தரவிடப்படுகிறது.

நாள் : **24.06.2026**

JAYASHREE THOMAS

Digitally signed by JAYASHREE THOMAS
Date: 2026.06.24 17:33:11 +0530

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 24ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JAYASHREE THOMAS Digitally signed by JAYASHREE THOMAS Date: 2026.06.24 17:33:17 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.

**<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பட்டியல்</u>**

| | |
|---|---|
| அ.சா. 1 | திரு. பழனிவேல் (சிறப்பு உதவி ஆய்வாளர்) |
| அ.சா. 2 | திரு. எழில்மாறன் ( தலைமை காவலர்) |
| அ.சா. 3 | திரு. ஜெயசந்திரன் ( இரண்டாம் நிலை காவலர்) |
| அ.சா. 4 | திரு. ராஜேஷ் ( காவல் ஆய்வாளர்) |

**<u>அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களின் பட்டியல்.</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 03.11.2023 | தனி அறிக்கை |
| 2 | அ.சா.ஆ.2 | 03.11.2023 | எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 3 | அ.சா.ஆ.3 | 03.11.2023 | கத்தியை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசர் . |
| 4 | அ.சா.ஆ.4 | 03.11.2023 | முதல் தகவல் அறிக்கை |
| 5 | அ.சா.ஆ.5 | 03.11.2023 | பார்வை மகசர் |

| | | | |
|---|---|---|---|
| 6 | அ.சா.ஆ.6 | --- | மாதிரி வரைப்படம் |

**<u>அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருள்கள்</u>:-**

| | |
|---|---|
| சா.பொ.1 | அதில் வெட்டும் இரும்பு பாகம் 22 செ.மீ, அதில் இரும்பு பூனுடன் கூடிய மரக்கைப்பிடி14 செ.மீ மர கைப்பிடியில் வளைந்த இரும்பு பகாம் 20 செ.மீ. |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u> –** இல்லை.

JAYASHREE THOMAS Digitally signed by JAYASHREE THOMAS Date: 2026.06.24 17:33:30 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.

**<u>குறிப்பு</u>:**

1. விசாரணை காலத்தில் எதிரி நீதிமன்ற காவலில் இருந்தார்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

JAYASHREE THOMAS Digitally signed by JAYASHREE THOMAS Date: 2026.06.24 17:33:35 +0530